# களத்தில் இளைஞர் அணி

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.




பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி,
திருநெல்வேலி மத்திய மாவட்டம்.




சங்ககிரி சட்டமன்றத் தொகுதி,
சேலம் மேற்கு மாவட்டம்.




உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் தெற்கு மாவட்டம்.




தென்காசி சட்டமன்றத் தொகுதி,
தென்காசி தெற்கு மாவட்டம்.




ஒசூர் சட்டமன்றத் தொகுதி,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.




சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.




திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி,
திருச்சி மத்திய மாவட்டம்.




சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி,
சென்னை தெற்கு மாவட்டம்.




தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (10வது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| சாத்தூர் | – இராசா அருண்மொழி |
| பென்னாகரம் தொகுதி ஏரியூர் ஒன்றியம் | – பி. தர்மசெல்வன் |
| பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் நகரம் & ஒன்றியம் | – பி.என்.பி.இன்பசேகரன் |
| வில்லிவாக்கம் | – வழக்கறிஞர் அருண் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 12.04.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.



திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் ரத வீதிகளில் கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வாக்குகள் சேகரித்தார். உடன் வெற்றி வேட்பாளர் கோவி. செழியன், அணியின் மாநில துணைச் செயலாளர் வேங்கை வெங்கடேஷ் சுரேந்தர் உள்ளிட்டோர் உள்ளார்கள்.

# திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பு !

திருச்சி, ஏப்.14-

திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரை சூடுபிடித்துள்ள நிலையில், தி.மு.க. வேட்பாளரும் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (ஏப்ரல் 12) மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைப் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பரப்புரை நடைபெற்ற இடங்கள்:

பொன்மலைப் பகுதிக்குட்பட்ட வார்டு எண்கள் 45 மற்றும் 45Aவில் அமைந்திருக்கும்:

கல்கண்டார்கோட்டை
பொன்னேரிபுரம்
மூகாம்பிகை நகர்
திருநகர்
பெரியார் நகர்
பொன்மலைப்பட்டி
மொராய் சிட்டி எக்ஸ்டென்ஷன்

ஆகிய பகுதிகளில் திறந்த நிலையில் உள்ள ஜீப்பில் சென்றபடி அமைச்சர் வீதி வீதியாக வாக்கு சேகரித்தார்.

உரையின் சிறப்பம்சங்கள்:

பரப்புரையின் போது பொதுமக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஸ், கடந்த ஐந்து ஆண்டுகளில் கழக அரசு செயல்படுத்திய சாதனைத் திட்டங்களையும், குறிப்பாக அந்தந்த வார்டுகளில் நிறைவேற்றப்பட்ட உட்கட்டமைப்புப் பணிகளையும் விரிவாக எடுத்துக் கூறினார். தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் தொடர மீண்டும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

பங்கேற்ற நிர்வாகிகள்:

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதிக் கழகச் செயலாளர் தர்மராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் தமிழ்மணி, முருகானந்தம், மாமன்ற உறுப்பினர் சித்தா லட்சுமி முருகானந்தம் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர்

# த.சந்திரசேகரன் சகோதரர் த.ரெங்கராஜ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



புதுக்கோட்டை, ஏப்.14-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சி.தனக்கோடியார் மகனும், தி.மு.க விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர், மாவட்ட கால்பந்து கழக துணைத் தலைவர் த. சந்திரசேகரன் அவர்களின் தம்பியும் ரெ.அரவிந்தன் அவர்களின் தகப்பனாரும் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் த.ரெங்கராஜ் 12.04.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 13,04,2026 திங்கள் கிழமை காலை 10 மணியளவில் விராலிமலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு விராலிமலை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவருக்கு வயது 61.

இவருக்கு மனைவியும், 2 மகள்கள், 1 மகனும் உள்ளனர். இவரது திருமணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவர் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மறைவு செய்தி அறிந்ததும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் விராலிமலை தொகுதியின் கழக வேட்பாளருமான கே. கே. செல்லபாண்டியன் மற்றும் கழகத்தினர், நண்பர்கள், உறவினர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.எம். சுந்தரராஜன்

ஏப்ரல் 14 (2010)



கழகம் துவங்கிய நாளிலேயே உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். முதன்முதலாக ‘அறிஞர் அண்ணா மன்றத்தை’ தோற்றுவித்து, கழக பாசறைக் கூட்டங்களை நடத்தியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.